# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி 627 012

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் 18.05.2018 அன்று நடைபெறும் இளம் முனைவர் (M.Phil) மற்றும் ஆராய்ச்சிப்படிப்பில் (Ph.D) ஜீலை 2018 அமர்வில் சேர்வதற்கான தகுதித் தேர்வு நடத்தப்படுகிறது. இவற்றில் நாகர்கோவில் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியில் இருந்தும், கேரளாவில் இருந்தும் இளம் முனைவர் பட்ட படிப்பிற்காக தேர்வு எழுதும் மாணாக்கர்கள் நாகர்கோவிலில் உள்ள **ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில்** தேர்வினை எழுதலாம். இதைத் தவிர மற்றப் பகுதிகளில் இருந்து இளம் முனைவர் (M.Phil) பட்டப் படிப்பிற்காக தேர்வு எழுதும் மாணாக்கர்களும் மற்றும் ஆராய்ச்சிப்படிப்பிற்கான தகுதித் தேர்வு எழுதும் மாணாக்கர்களும் பல்கலைக்கழகத்தில் மட்டுமே எழுத வேண்டும். ஆராய்ச்சிப்படிப்பிற்கான மாணாக்கர்கள் நேர்முக தேர்விலும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும். மாணாக்கர்கள் தேர்விற்கான விபரங்களை குறுஞ்செய்தி மூலம் கிடைக்கப் பெற்றவுடன் பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து நுழைவுச்சீட்டைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும் இப்பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்படும் இளம் முனைவர் பட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்பிற்கான தகுதி தேர்வின் அடிப்படையில் இளம் முனைவர் (M.Phil) பட்டப் படிப்பு முடித்த மாணாக்கர்கள் ஒரு வருடத்திற்குள் ஆராய்ச்சிப் படிப்பினை படிக்க விரும்பினால் ஆராய்ச்சிப் படிப்பிற்காக (Ph.D) மீண்டும் தகுதித் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறது. ஆனால் நேர்முகத் தேர்வில் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும். ஆராய்ச்சிப் படிப்பில் ஜீலை 2018 அமர்வில் சேர விரும்பும் இம்மாணாக்கர்கள் 18.05.2018 அன்று நடைப்பெறவிருக்கும் நேர்முகத்தேர்வில் M.Phil சேர்க்கைக்கான ஆதாரத்துடனும் மற்றும் பதிவிறக்கம் செய்யப்பட்ட தகுதித் தேர்விற்கான சான்றிதழுடனும் கலந்து கொள்ளலாம்.

**முனைவர் சே. சந்தோஷ் பாபு**
**பதிவாளர்**